சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு
தஞ்சையின் சிறப்புகள்

---

* தஞ்சை பிற்காலச் சோழர்களின் முக்கிய தலை நகரம் ஆகும்.தஞ்சாசுரன் என்ற அசுரனை மஹாவிஷ்ணு அழித்து அவன் ஞாபகமாய் உருவானது தஞ்சை. ஆழ்வார்களால் [திருமங்கை மன்னன்] பாடப்பட்ட திவ்யதேசம் இது.

* தேவிமாஹாத்மியத்தில் வர்ணிக்கப்படும் சும்ப-நிசும்ப அரக்கர்களில் நிசும்பனை அழித்த தேவியின் கோயில் மிக விசேஷமாக "நிசும்பசூதனி" ஆலயமாக இங்கே இருக்கிறது.

* தன் சிவ பக்தியை வெளிப்படுத்தும் வண்ணம் ராஜராஜ சோழன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிய பெரியகோயில் இவ்வூரின் மிக முக்கிய இடம் ஆகும். முழுக்க முழுக்க மஹாபலிபுரம் போலக் கற்களைக் கொண்டே உருவாக்கப்பட்ட சிவாலயம் இது.

* பல்லவர் கோயில் கலையில் இருந்து வித்யாசப்பட நினைத்த மன்னன் மூலஸ்தானத்தின் விமானத்தின் உயரத்தை மிகவும் உயர்த்தி நுழைவாயில் கோபுர அளவைக் குறுக்கி இருக்கிறான்.

* இந்த மூலஸ்தான விமானமே "தக்ஷிணமேரு" என்று போற்றப்படுகின்றது.மிகப்பெரிய சிவலிங்கம், மிகப்பெரிய அம்பிகை, மிகப்பெரிய நந்தி என அனைத்தும் மிகப்பெரியதாகவே இருக்கின்றன.

* இறைவன் மிகவும் பெரியவன் என்ற உண்மையை எளிமையாக மக்களுக்கு உணர்த்தவே அனைத்தும் பெரியதாக அமைக்கப்பட்டு இருக்கின்றன.

* இறைவனின் பெயர் "ப்ரஹதீஸ்வரர் [மிகவும் பெரியவர்], தேவியின் பெயர் "ஸ்ரீப்ருஹன்நாயகி".

* கோயிலைப் "பெரிய கோயில்", "பெருவுடையார்கோயில்" ,மற்றும் "ராஜராஜேஸ்வரம்" என்றும் போற்றுகின்றனர்.

* இக்கோயிலின் அம்பிகையை கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீமுத்துஸ்வாமி தீக்ஷிதர் பல கீர்த்தனைகளால் போற்றிப் பாடி இருக்கிறார்.

* இறைவனின் உற்சவத் திருமேனி திருவாரூர்த் தியாகராஜர் போலவே மிக அழகாக அலங்கரிக்கப் பட்டு இருப்பதும் மிக முக்கிய சிறப்பு ஆகும்.

* ஆயிரம் காலமாக எந்த ஒரு சேதமும் இல்லாமல் இக்கோயில் நிற்பதற்குக் காரணம், மன்னனின் உறுதியான பக்தி, அவன் குரு கருவூர்த் தேவரின் அலோசனைகள், விமானத்தின் மேல் புறச்சுற்றுகளின் காலத்தைக் கடக்க வைக்கும் த்ரிபுராந்த மூர்த்திகளின் ப்ரதிஷ்டை என முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

* ராஜராஜ சோழனின் பிறந்த நாள் ஐப்பசி சதயத்தில் மிக விசேஷமாகக் கொண்டாடப் படுகின்றது.பற்பல மன்னர்கள் இந்நாட்டை ஆட்சி செய்து இருப்பினும் இவன் ஒருவனது பிறந்தநாளே கொண்டாடப் படுவது மிகவும் சிறப்பாகும். காரணம் இவனது திருப்பணிகளே!

* ராஜராஜனின் இஷ்ட தெய்வமான வாராஹி அம்மன் சன்னிதி கோயிலுக்கு உள்ளே இருக்கிறது. அவனது குருவின் சன்னிதியும் கோயிலுக்கு உள்ளேயே இருக்கின்றது.

* கோயிலைச் சுற்றிப் பாதுகாப்புக்கென கோட்டையும் அகழியும் இருக்கின்றன.பிற்கால மஹாராஷ்ட்ர மன்னர்களின் தலைநகரமும் தஞ்சாவூரே! அவர்தம் அரண்மனையும் வாரிசுகளும் இன்றும் உள்ளனர்.

* மிகப்பெரிய ஓலைச்சுவடி நூலகமான சரஸ்வதி மஹால் இவ்வூரில் இருக்கிறது.தமிழ் மொழி வளர்ச்சிக்கான தமிழ்ப் பல்கலைக் கழகம் இவ்வூரில் தான் இருக்கின்றது.

* சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான ஸ்ரீஸ்யாமா சாஸ்த்ரிகள் இவ்வூரில் தான் பலகாலம் வாழ்ந்தார். இவ்வூரில் உள்ள ஸ்ரீபங்காரு காமாக்ஷி சன்னிதியில் தான் அர்ச்சகராகவும் பணி செய்தார்.

* தஞ்சாவூர்த் தலையாட்டி பொம்மை, ஓவியம், வீணை, தம்புரா, அழகிய தட்டு, நெல் விளைச்சல் போன்ற பல சிறப்புகளைக் கொண்டது இவ்வூர்.

* குருவின் அறிவுரைப்படி தூய பக்தியுடன் ஆன்மீகப் பணிகள் செய்து மக்களுக்கு சேவை செய்யும் எவரையும் காலம் நினைத்துப் பார்க்கும் என்பதே தஞ்சை உணர்த்தும் தத்துவம் ஆகும்.